# Centre Tamoul d'Enseignements en France
# பிரான்ஸ் தமிழர் கல்வி நிலையம்
## தமிழ்ப் பேச்சுப் போட்டி - 2022

11 வயதுக்குட்பட்டவர்கள்

---

# தமிழ் மொழி

கல் தோன்றி மண் தோன்றா காலத்து முன்தோன்றிய தமிழ் என சான்றோர்களால் புகழப்படும் செம்மொழியாகிய தமிழ் எங்கள் தாய்மொழி. கல் என்பது மலையைக் குறிக்கும், மண் என்பது விவசாய நிலத்தைக் குறிக்கும். மலையும் மலைசார்ந்த இடமாகிய குறிஞ்சி நில வாழ்வு தொடங்கி, வயலும் வயல்சார்ந்த வாழ்வாகிய மருதநில வாழ்வு தொடங்க முதலே தமிழ்மொழி தோன்றிவிட்டது என்ற யதார்த்த உண்மையை புலவர் பாடிய இவ்வரி எடுத்துக்காட்டுகின்றது.

தமிழ் ஒரு தொன்மையான மொழி மட்டுமல்ல அது ஒரு நாகரீகத்தின் மொழி. தமிழின் கீர்த்தி தொன்மையில் மட்டுமல்ல தொடர்ச்சியிலும் உள்ளது. தமிழ்மொழி போன்ற ஆதிமொழிகள் பல இன்று இல்லை. ஆனால் தமிழ்த்தாய் இழநங்கையாய் உலா வருகின்றாள். தமிழ்மொழி வரலாற்றில் பல படிகளை தாண்டி வந்துள்ளது. மூலத்தமிழ், தொல்தமிழ் அல்லது பழந்தமிழ், செந்தமிழ், நவீனதமிழ் என தமிழ்மொழியின் வளர்நிலையை மொழியியலாளர் சுட்டிக்காட்டுவார்கள். மூலத்தமிழ், தொல்தமிழ் நிலையில் தமிழிலிருந்து பல மொழிகள் சிறிய இலக்கண, உச்சரிப்பு மாற்றத்துடனும் வடமொழியின் கலப்புப்பெற்றும் தோன்றியுள்ளன. தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் போன்ற பல மொழிகள் இப்படித் தோண்றியவையே. தமிழின் சுவடுகள் தமிழகத்திலும் வெளியே இந்தியாவிலும் அதற்கும் வெளியே உலகநாடுகளிலும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

தமிழின் இலக்கண நூலான தொல்காப்பியம் மொழிக் கட்டமைப்பையும், தமிழர் வாழ்வியலின் மேன்மையையும் எடுத்து இயம்புகிறது. ஒரு மொழி மக்கள் வாழ்வில் அவர்களது நாவில் பயில்வதே உண்மையான மொழியின் இருப்பு. அவ்வகையில் தமிழ்மொழி உலகு உள்ளவரை வாழும்.

நன்றி